IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 95/2022

Deposition of Witness : DW 1

Name : ஜோதி (வயது – தெரியாது)

Father's Name /W/o : க/பெ ராஜா

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : சத்துவாச்சேரி

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 24.10.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் என் வழக்கறிஞர் மூலம் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மையா என்றால் உண்மைதான். என் பதிலுரையில் சர்வே எண்கள் உள்ளதா என்றால் தெரியவில்லை. எங்கு குடியிருக்கிறேன் எந்த சர்வே எண்ணில் குடியிருக்கிறேன் என் பதிலுரையில் தெரிவிக்கவில்லை என்றால் தெரியவில்லை. என் பிரமாண பத்திரத்தில் சர்வே எண்கள் தெரிவித்துள்ளதா என்றால் படிக்கதெரியவில்லை எழுத்து தெரியவில்லை கண் மங்கலாக தெரிகிறது.

2. பதிலுரையில் சொல்லாத சங்கதிகள் என பிரமாண பத்திரத்தில் பொய்யாக தெரிவித்துள்ளேன் என்பதால் என் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்றால் சரியல்ல. பதிலுரையில் நான் போட்ட கையெழுத்து எனக்கு தெரிகிறதா என்றால் தெரிகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருக்கும் வீடு என் வீடா என்றால் ஆம். அதில் தளம் போடவில்லை என்றால்

சரிதான். மேற்படி வீட்டில் நான் வசித்து வருகிறேனா என்றால் இல்லை.

3. மேற்படி வீட்டில் மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வீட்டில் மின் இணைப்பு இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு கட்டியுள்ளேனா என்றால் கட்டியுள்ளேன். எந்த மாதத்தில் மின் இணைப்பு கட்டியுள்ளேன் என்றால் தெரியாது. மேற்படி மின் இணைப்பு கட்டின ரசீது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் தாக்கல் செய்த ஆவணங்களில் மின் இணைப்பின் ரசீது இல்லை என்றால் சரிதான். நான் அமுதா ஆனந்தன் மற்றும் மாலா லோகநாதன் வீட்டிற்கு அருகில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக குடியிருக்கிறேன் என்றால் 15 வருடங்களாக அங்கு குடியிருக்கிறேன். நான் குடியிருக்கும் வீட்டில் மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வீட்டில் தான் நான், என் கணவர், அரி ஆகியோர் குடியிருக்கிறோம் என்றால் சரிதான்.

5. நான் சிமெண்ட் சீட் கூரை போட்டுள்ளேன் என்றால் சரிதான். என் மகன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் மருமகள் மற்றும் பேத்திகள் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் அரிகில்பாடியில் குடியிருக்கிறார்கள். எனக்கு அருணா என்ற என் மகள் உள்ளார். அவர் மெத்தவாடி கிராமத்தில் வசிக்கிறார் என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் இடையீட்டு மனு எண்.435/2022 இல் 23.03.2023 இடைக்கால STATUS QUO ORDER வாதியின் சுவாதீனத்தை இடையீட்டு செய்ய கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது மேலும் இடைக்கால உத்தரவும் 11.04.2023 வாதியின் அமைதியான சுவாதீனத்தை வழக்கு முடியும் வரை இடையூறு செய்யகூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் என் வழக்கறிஞர் என்னிடம் தெரிவித்தாரா என்றால் தெரியாது.

6. மேற்படி இடைக்கால மனு எண்.435/2022 இன் வாதியின் சுவாதீனத்தை இடைறு செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

என்றால் தெரியாது. சகுந்தலா அவர் இருக்கும் வீடு சுற்றி இருக்கும் இடங்கள் அனைத்தும் அடமானம் வைத்துள்ளார்கள் என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ –10 அடமான பத்திரம் ஆவண எண்.2782/2021 என் வழக்கறிஞர் தாக்கல் செய்தது என்றால் தெரியாது.

7. பி.சா.ஆ –10 அடமான பத்திர ஆவண எண்.2782/2021 இல் 2337 சதுர அடி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் தெரியாது. அதில் செக்பந்தி வடக்கு கஸ்தூரி வீடு, கிழக்கு முனியம்மாள் வீடு, மேற்கு தெரு , தெற்கு தெரு உள்ளது என்றால் சரிதான். மேற்படி செக்பந்தியில் 2337 சதுர அடி உள்ளது என்றாலும் அதனை தான் அடமானம் வைத்துள்ளார்கள் என்றால் தெரியாது. என் பிரமாண பத்திரத்தில் சகுந்தாலா (வாதிக்கு) அரசாங்கம் பட்டா வழங்கியுள்ளது என்று தெரிவித்துள்ளேன் என்றால் தெரியாது. வாதி சகுந்தலாவிற்கு பட்டா கொடுத்தது தெரியுமா என்றால் தெரியாது.

8. நான் அடித்தளம் போட்டது தெரியுமா என்றால் தெரியும். சகுந்தலா வீடு கட்டியது தெரியுமா என்றால் தெரியாது. என் பிரமாண பத்திரம் 7 ஆம் பத்தியில் வாதிதான் பட்டா வாங்கி அனுபவித்து வருகிறார் என்று தெரிவித்துள்ளேன் என்றால் தெரிவிக்கவில்லை. அப்படி அதில் எழுதி இருந்தால் தவறு என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் கையெழுத்து மட்டும் தான் போட்டேன் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது.

9. 2 செண்ட்க்கு மேல் இருந்தால் தன் அரசாங்கம் கிராம நத்தம் பட்டா வழங்குவார்கள் நான் இருக்கும் 2 செண்ட் இல்லை அதனால் அரசாங்கம் கிராம நத்தம் பட்டா வழங்கியிருக்க மாட்டார்கள் நான் வாதியின் வீட்டை அபகரித்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வயது என்னவென்றால் தோராயமாக 58 வயது இருக்கும். தளம் போடாத தாவா சொத்தின் வீட்டில் நான் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்தேன் என்றால் 40 வருடங்களாக குடியிருந்தேன். தற்போது தாவா சொத்து வீட்டின் எதிரில் நான் குடியிருக்கும் இடத்தின் எத்தனை ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் 15

ஆண்டுகளாக குடியிருக்கிறேன்.

10. தாவா சொத்தில 40 வருடம் மற்றும் தற்போது இருக்கும் இடத்தில் 15 வருடம் ஆக 55 வருடங்களாக அங்கு வசிக்கிறேன் என்றால் சரிதான். என் பிரமாண பத்திரத்தில் 44 வயது என்று தெரிவித்துள்ளேன் என்றால் தெரியாது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் எதிர்புரம் தற்போது வசித்து வரும் வீட்டிற்கு பட்டா உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்து மற்றும் தற்போது குடியிருக்கும் வீட்டிற்கும் பட்டா உள்ளதா என்றால் உள்ளது.

11. என் பிரமாண பத்திரம் 3 ஆம் பத்தியில் கிராமத்தில் வசிக்கும் அனைவருக்கும் கிராம நத்த பட்டா அரசாங்கம் வழங்கயதாக நான் தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை. நான் தாவா சொத்திற்கான மனைவரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தில் இருந்திருந்தால் வருவாய் துறையினர் பார்வையிட்டு என் பெயரில் பட்டா வழங்கியிருப்பார்கள் அவ்வாறு பட்டா எதுவும் வழங்கவில்லை என்றால் சரியல்ல.

12. என் பதிலுரை பத்தி 4 இல் வாதி மற்றும் பிரதிவாதிகள் ஒரே சர்வே எண்ணில் பட்டா வழங்கியுள்ளார்கள் என்று தெரிவித்துள்ளேன் என்றாலும் அப்படி அரசாங்கம் பட்டா வழங்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்திற்கு எதிரில் நான் 15 வருடங்களாக குடியிருக்கும் வீட்டிற்கானது என்றால் சரியல்ல. என் பதிலுரையில் தாவா சொத்து கிராம நத்தம் புறம்போக்கு நிலம் என்று தெரிவித்துள்ளேன் என்றால் தெரியாது.

13. கிராம நத்தம் 1.5 செண்ட் மற்றும் 2.5 செண்ட்க்கு வழங்கமாட்டார்கள் 4 அல்லது 5 செண்ட் நிலத்திற்கு தான் கிராம நத்த பட்டா வழங்குவார்கள் எனவே தாவா சொத்து கிராம நத்தம் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் வீட்டில் நான் அத்துமீறி ஆக்கரமித்து கட்டிங்கள் கட்டியுள்ளேன் என்றாலும் நீர் நிலை புறம்போக்கு, அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு கட்டப்பட்ட

வீடுகளுக்கு தடையில்லா சான்றிதழ் அரசாணை நிலை எண்.977 வருவாய் நாள்.30.10.1995 மீறி நான் மின் இணைப்பு வாங்கியதற்கு என் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

14. எனவே நான் ஆக்கிரமிப்பு சட்டம் 1905 தமிழ்நாடு 3 ஆம் சட்டத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நீதிமன்றம் மூலம் உத்தரவு பிறப்பிக்கலாம் என்றால் சரியல்ல. நான் கட்டியதாக சாட்சியம் அளித்த மனை வரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. நான் போலியான ஆவணங்கள் தாக்கல் செய்து பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்பதால் என் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வாதி தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. எனவே வாதி கோரிய விளம்புகை மற்றும் செயலுறுத்து கட்டளை பரிகாரம் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.